விலை 0—1—3 "UDAYAM" Weekly. Reg. No

15 NOV 1946
MADRAS

# உதயம்

வார வெளியீடு. ஆசிரியர் :— M. கந்தசாமி

மலர் 1 | திருவத்திபுரம் 13—10—46 வியய புரட்டாசி 27உ ஞாயிறு | இதழ் 11

# சங்கல்பமும் மனமும் எல்லாருக்கு முண்டு

(கைவல்யம்)

கல்வி என்பது அறிவு, அந்த அறிவின் மேன்மை ஆலோசித்துப் பார்க்கும் குணத்திலிருக்கிறது தன் குறுகிய எண்ணத்திற்கும் நம்பிக்கைக்கும் தகுந்தவாறு ஆலோசிப்பது அறிவின் தன்மையாகாது. முன்னோர் சொன்ன சாஸ்திரங்களும் அவர்கள் வார்த்தைகளும் நமது அறிவுக்கு பக்கபலமாக வைத்துக்கொண்டாலும் பொது லோக அறிவிற்கும் நமது அறிவிற்கும் ஒத்துப்பார்த்தே எதையும் நிர்ணயிக்க வேண்டும். மோகத்தை எழுப்பி சனங்களை ஏய்க்கும் பிரசங்கம் செய்வது, தமோகுண தாக்கத்தையே விருத்தி செய்யக் கூடிய புராணக்கதைகளைத் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பது, பாமர ஜனங்களை பாமரர்களாக வைத்திருப்பதற்கு எது ருசுவென்று இதிகாசங்களை கிளறிக்கொண்டிருப்பது, பழய அந்தகார நிலையைச் சிறந்ததென்று புகழ்தல் அந்தப் புராணத்திற்கு இந்த காவியம் உபமானம்; அந்தக் காவியத்திற்கு இந்தப் புராணம் பிரமாணம் என்பவைகளெல்லாம் அறிவின் மேன்மையை அளிக்காது. நமது பண்டித அறிவெல்லாம் அவைகளுக்குக்குள் நின்று விட்டமையால் அவர்களுக்கும் நமது சமூகத்திற்கும் லோகப் பொது விதி தென்படவில்லை.

கடவுளைக் கண்டுபிடிக்க முடியாது தேடிப்பிடிக்கவுமாகாது. ஆனல் கடவுளை சிருஷ்டித்துக் கொள்ளலாம். அது தான் வழக்கம். நடந்திருப்பதும் அப்படியே. நமது நாட்டில் இருக்கும் கடவுள்களெல்லாம் சிருஷ்டித்த கடவுள்களேயல்லாமல் கண்ட கடவுள் ஒன்றுகூட இல்லை. உள்ளத்திற்கு அப்பாற்பட்டது கடவுள் என்கிறோம். உள்ளத்திற்கு கடவுளைக் கண்டுபிடிக்கும் சக்தியும் குணமுமில்லை. உண்டாக்கப்படுகிற குணமிருக்கிறது. சங்கல்பம் சேர்ந்தது மனம். மனம் கெட்டு அறிவை படைந்து, ஞானம் வந்து ஆத்மாவைத் தெரிந்து கடவுளை கண்டதாகச் சொல்லப்படும் ரிஷிகளெல்லாம் சங்கல்பம் நாசமாகி மனமில்லாமல் இருந்தார்கள் என்று நாம் சொல்லிக் கொள்ளுகிறோம். சங்கல்பமும் மனமுமில்லாமல் எந்த ரிஷியுமிருந்ததில்லை என்றே அவர்கள் கதைகள் சொல்லுகின்றன. கதைகளுளின்ள ரிஷிகளை நாம் கண்டதில்லை.

திருவண்ணாமலை ரமணீக மகாரிஷியை நாம் கண்டதுமுண்டு, கேட்டதுமுண்டு. பக்தர்களும், பத்திரிகைகளும், பார்ப்பார்களும் தூக்கிப் புகழ்ந்தார்கள். ரிஷியாக்கினார்கள். இராக்காலங்களில் திருவண்ணாமலைத் தெய்வம் ரிஷியைக்கண்டு பேசிப்போகும் என்றார்கள். தேவர்கள் அங்கே வந்து போவதை குருக்களும் ஆர்ச்சகர்களும் பார்த்ததுண்டாம். சில சமயங்களில் அவர்மீது பூலோகத்திலில்லாத புஷ்பங்களும் கிடக்கும். மனிதர்கள் அதை கண்டவுடன் அவை மறைந்துபோகும். இதெல்லாம் சேர்ந்து மடமும் சொத்தும் உண்டாயிற்று. மடமும் சொத்தும் சேர்த்துக் கொடுத்த பாதேசிகளை ஏமாற்றிக் கோர்ட்டுக்குப்போய் நான்தான் சம்பாதித்தேன் என்றார். ரிஷி. அதன்படியே தீர்ப்பு பெற்று தன் தம்பிக்கு மடத்தையும் சொத்தையும் ரமணீக மகாரிஷி எழுதி வைத்துவிட்டார். மனமும் சங்கல்பமும் இல்லாமல் நிஷ்டையிலேயே இருக்கும் ரிஷித்தன்மை அப்படித்தானிருக்கும். இனியும் சிறிது நாள் சென்றால் திருவண்ணாமலைப் புராணத்திற்குள் வந்துவிடுவார். பிர்மாவும் விஷ்ணுவும் யார் பெரியவர்கள் என்று போட்ட சண்டையில் யார் பெரியவர்கள் என்பதைப் பரிசோதித்துக்காட்ட சிவபெருமான் திருவண்ணாமலையில் அடிமுடியில்லாத அக்கினி கம்பமானார் என்று அருணாசலப்புராணம் சொல்லுகிறதோ அந்த அக்கினி கம்பத்தின் சுவாலை ரமணீக மகாரிஷி மடத்திலும் அங்கிருக்கும் பக்தர்களுக்கும் தீங்கிழையிழைக்காமலிருக்க ரமண ரிஷியான பிராமண உத்தமர் தன் தவமகிமையால் சுவாலையை நிறுத்தி சிவபெருமானின் மகிமை என்றும் நிலைநிற்க ஆசீர்வதித்தார் என்று பண்டிதர்கள் பாடிவிடுவார்கள். இப்படியே இதிகாச புராணங்களில் வந்திருக்கும் ரிஷிகளெல்லாம்!

நாரதரும் அகஸ்தியரும் பெரிய ரிஷிகள். வள்ளியை சுப்பிரமணியருக்குச் சொன்னதும் நாரதர். விஷ்ணுவின் பெண் ஜாதி சீதையாகப் பிறந்து இராவணன் தூக்கிப்போக விஷ்ணுவிற்கு சாபம் கொடுத்ததும் நாரதரிஷி. அன்றியிருந்து இன்று வரையிலும் உலக க்ஷேமார்த்தமாக பூலோகத்திற்கும் தெய்வலோகத்திற்கும் சஞ்சாரம் செய்து கொண்டிருப்பதாக சொல்லப்படுகிறவரும் அதே நாரத ரிஷி தான். பண்டிதர்கள் பிரசங்கத்திலும் நாடக சினிமாக்களில் தெய்வலோகத்திலிருந்து இறங்கி காட்சி அளிப்பவரும் அதே நாரதர்தான். சிறிது நாளாக பூலோகத்தில் நாரதரில்லை. கல்கத்தா, பம்பாய் முதலிய இடங்களில் நடந்த சம்பவங்களை தெய்வலோகப் பூசாரிகளுக்குத் தெரியப்படுத்த எமபட்டணம் போயிருக்கிறார். பந்திக்கு முந்திக்கொள் படைக்குப் பிந்திக்கொள் என்று நாங்கள் சொன்ன வேதவாக்கியத்தை நம்முடைய சந்ததிகள் பின்பற்றியே வருகிறார்கள் என்கிற சந்தோஷச்செய்தியுமிருக்கிறது.

இப்பொழுது எமலோகத்திற்கு பல குத்திரப் பணக்காரர்களும் வருவார்கள்; அவர்களை எல்லாம் அந்தஸ்துப் பிரகாரம் பிதிர்லோகத்தில் வைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை நமது வைதீகர்கள் பூலோகத்திலேயே செய்து அனுப்புவார்கள். எமலோகமும் பிதிர்லோகமும் நம்முடைய ஜாதியான பூலோகத்து பிராமணர்களிடம்தானேயிருக்கிறது. கடவுள் வாக்கும் எங்கள் ஏற்பாடுமெல்லவா அது? சனநாயகமோ கம்யூனுஸ்டு நாயகமோ அதை எப்படி மாற்றும்? அது பூலோகத்து சங்கதியா? தெய்வலோகத்துச் சங்கதியல்லவா? சுயமரியாதைக்காரர்கள் என்னமோ உளறுகிறார்கள்; பகுத்தறிவிற்கு விடாமல் படித்தவர்களும் நம்பக்கமிருக்கிறார்கள்; பூலோகத்தில் எந்தக் குறைவும் நமக்கில்லை என்பதாகச் சொல்லிவருவர். இந்த நாரத ரிஷியின் பிறப்பை பலவாறு சொல்லி பின் பிர்மாவின் பிள்ளை என்று சொல்லுகிறார்கள். சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் நடந்த கலியாணத்தில் பிர்மா புரோகிதனாக விருந்தார்; பார்வதியான பெண்ணைக்கண்டு பிர்மா மோகித்தார் வெளிப்பட்ட சுக்கிலத்தை கும்பத்தில் விட்டார்; அகஸ்தியர் பிறந்தார். பத்து அவதாரங்களுக்கு முன்னிருந்து இன்றுவரையிலும் இருக்கிறார்; இதிகாச புராணங்களிலெல்லாமிருப்பார்; கெங்கையிலிருந்து கமண்டத்தில் கொண்டுவந்த தண்ணீரை ஊற்றி காவேரியை உண்டுபண்ணினர் என்று சொல்லுகையில் அவருடைய சக்தி எவ்வளவு பெரிதாக விருக்கவேண்டும்! வடகோட்டு இமயமலையில் சிவபெருமானிருக்கிறார். முதல் முதல் சிவபெருமான் அங்கே வந்திருந்தபொழுது வடகோடு

(இதன் தொடர்ச்சி 8-ம் பார்க்க)

# பேதை மகளிர் என இகழப்படுவர்; தீரமகளிராய்த் திகழ்வ தெங்ஙனம்?

(திருமதி R. அன்னபூரணி)

அகிலமெங்கனும் சமதர்ம முழக்கம் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அறிவுலகமாம் இவ்விருபதாம் நூற்றாண்டில் ஆண்பாலரேயன்றிப் பெண்பாலரும் விழிப்படைந்து தங்கட்கும் சம உரிமைகள் வேண்டுமென போராட முன் வந்தாயிற்று! ஆம் பெண்மக்களின் சுதந்திர வேட்கை நியாயமானதுதான்!!

உலகில் பகுத்தறிவுடைய மக்களாய்ப் பிறந்த, ஒவ்வொருவரும் தத்தமது ஆராய்ச்சியின் பயனைப் அர்த்தமற்ற கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து நேரிய சுதந்திர வாழ்வை நடாத்த விரும்புதல் இயல்பே. இயல்பினும் அத்தியாவசியமே.

என்றாலும் இந்தியாவில் மகளிர் சமத்துவப் பேச்சை எடுத்தவுடன்; அம்மம்மே! முப்பத்து மூன்று கோடி தெய்வங்கள் முட்டுக்கட்டையாய் நிற்கின்றன! பழமை விரும்பிகள் பதறுகின்றனர். பார்ப்பனக் கூட்டம் பதிவிரதா தர்மத்துக்கு பாதகம் வந்து விட்டதென நீலிக்கண்ணீர் வடிக்கின்றது. மதப்பூசலில் சிக்குண்ட வைதீக உலகம், பொய்யே நிறைந்த புராணக் குப்பைகளையும் தந்திரமே உருவாய சாத்திரச் சாக்கடைகளையும் காட்டி பயமுறுத்துகின்றது! அந்தோ! பெண்ணுலகு விடுதலைப் பெற்றாலன்றி, சமத்துவம் நிலவினாலன்றி ஒரு சமூகமோ ஒரு தேசமோ விடுதலைபெற விரும்புதல் குதிரைக் கொம்பே, என்பதை அன்னோர் உணர்ந்தார்களில்லைபோலும்!

இவை கிடக்க, இத்தனை எதிர்ப்புகளுக்கிடையேயும், 'கர்ம பூமி'யாகிய இந்தியாவில் ஜனித்ததின் காரணமாய், பேதை மகளிர் எனவும், பாப ஜென்மங்கள் எனவும் இகழப்படும் பெண்மக்கள், தீர மகளிராய்த் திகழ வேண்டுமானால், என் செய்தல் வேண்டும்? என்பதை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டுவது நமது இப்போதைய கடமையாகும்.

இந்தியாவில் பெண் மக்கள் இருந்து வரும் நிலையாதென்பதை யறியாதார் எவருமிரார். என்றாலும் இன்னும் விளக்கமாக அறிந்துகொள்ள விரும்புவோர், அமெரிக்க மாது, மிஸ். மேயோ என்னும் பெண்மணி எழுதியுள்ள இந்தியத்தாய் என்னும் நூலில், தெள்ளத் தெளியக் காணலாம். பால்மணமாறு பச்சிளங் குழந்தைகளை வயதடைந்த குமாரர்களுக்குப் பாரியாளாக்குவதையும், எழில் நிறைந்த இளமங்கையரை வயது தளர்ந்த விருத்தர்களுக்கு வதுவை செய்வதையும்;

இம்மாசற்ற சிறுமியரின் கணவர்கள் உலக இயல்பின்படி இறந்தொழிந்துவிடின் அது கடவுள் செயல் எனக்கூறி ஆயுள்பரியந்தம் மொட்டையடித்து மூலையில் உட்கார வைத்தலையும், இதன் மூலம் நாட்டிடையே களவொழுக்கங்களும் பகிரங்க விபசாரமும் பெருகி எண்ணற்ற சிசுக் கொலைகளுக்கு இடமேற்படுவதையும்; குறிப்பிட்ட ஒரு பெண் கூட்டத்தாரை தேவர்களுக்கு திருப்பணி செய்யவென்று (தேவதாசிகள்) பொட்டுக்கட்டி பகிரங்கவிலை மகளிராக்கி விபசாரத் தொழிலில் ஈடுபடுத்துவதையும்; இதன் மூலம் நாட்டிடையே துன்மார்க்க வியாதிகள் தங்குதடையின்றிப் பரவும்படிச் செய்தலையும், இன்னும் இதுபோன்ற அநேகம் ஊழல்களையும் இந்தியரின் செவிகளில் இடி முழக்கமென்ன ஒலித்துக்கொண்டிருக்குமாறு ஆணித்தரமாக எடுத்து விளக்கியுள்ளார்கள்.

இன்னோரன்ன இழிதகைமை வாய்ந்த இந்து மத சமூக ஊழல்களைப் புத்தக வாயிலாய் எடுத்தோதி ரோஷம் பிறக்கச் செய்த இவ்வம்மையை ஒரு சிறிதும் குற்றஞ் சொல்வதற்கில்லை என்றாலும் துன்மார்க்க ஊழல்களை மதசம்மதம் என்னும் திரைமறைவில் மூடி, மூடி வைத்துக் கொண்டிருக்கும் வைதீகக் கூட்டம் இவ்வம்மையைக் 'குப்பைக்காரி' எனக் கூப்பாடு போட்டது. ஆனால் அக்குப்பையைப் போக்க வழியுண்டா? என்பதைப் பற்றி சிந்திக்கவேயில்லை. (ஏனென்றால் சாயலம் போய்விடுமே!)

இந்நிலையில், இந்தியப் பெண்மக்களின் இப்போதைய கடமையென்னவென்றால், மேற்குறித்த ஊழல்களும் கொடுமைகளும் வளர்ந்து வருவதற்கும் இந்திய மகளிரை பேதைகள் என அழைப்பதற்கும் நிலைக்களனாய், இருந்துவருவது எது? என்பதை பரிசீலனைச் செய்து அதனை வேரறக்களைதற்கு முற்படுவதேயாம். அது எதுவென்றால் பெண்மக்களைச் சூழ்ந்திருக்கும் மூட நம்பிக்கைகள்! என்னும் முட்புதரேயாகும். மூட நம்பிக்கையிலிருந்துதான், தெய்வ நம்பிக்கை, பேய்பிசாசு நம்பிக்கை, பில்லி சூன்ய நம்பிக்கை, வேண்டுதல், பிரார்த்தனை, சாந்தி சடங்கு எல்லாம் புறப்படுகின்றன. இம்மூட நம்பிக்கைகள் பொதுவாக இந்தியாவுக்கும் சிறப்பாக இந்துக்களுக்கும் சிறப்பினும் சிறப்பாக பெண்மக்களுக்கே உரித்தாயிருக்கின்றது. இருக்கட்டும்! இவைகளால் மக்களுக்கு கடுகளவு நன்மையேனும் உளதோ? முக்காலுமில்லை! இதற்குப்பதிலாய் மலையளவு தீமையே பயக்குகின்றது.

எனவே, விடுதலை விரும்பும் பெண் மக்கள் சமத்துவம் கோரும் பெண்மக்கள் மேற்குறித்த மூடநம்பிக்கைகளை அறவே ஒழித்தலை தமது தலையாய கடமையென ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

## தெய்வ நம்பிக்கை.

சகோதரிகளே! பெண் மக்கள் 'மதக் கட்டளை' என்னும் புலியால் பயமுறுத்தப்பட்டு, பழக்க வழக்கம் என்னும் இருட்டறையில் ஒடுக்கப்பட்டு, ஆண்மக்களின் அதீத ஆதிக்கத்தால் அடக்கப்பட்டு கேவலம் நாயினுங் கடையராய் மதிக்கப்பட்டு, நடைப் பிணங்களாய் வாழ்ந்து வருவதற்கு மூலகாரணமாயிருந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் பாரபட்சமுற்ற இக்கடவுளர்கள் ஐயகோ! நமக்கு அவசியமில்லை ஆதலால் இத்தெய்வ நம்பிக்கையை ஒழிக்க வேண்டுமென்று கூறுவதில், எமக்கொன்றும் குற்றந் தோன்றவில்லை. என்றாலும் இதற்கு சகோதரிகளில் நூற்றுக்கு ஒருவர் இணங்குவரோ என்பதும் ஐயப்பாடாயிருக்கிறது. எஞ்சிய தொண்ணூற்றொன்பது பேர் கடவுள் நம்பிக்கையை மறக்கலாமா? கடவுள் இல்லையென்று கூறலாமா? என்று கண்ணை மூடிக்கொண்டு பிதற்றுவர். ஆனால் இப்போது நாம் கடவுள் இருக்கிறதா? இல்லையா? என்பதைப் பற்றி தர்க்கிக்க இறங்க வேண்டாம். கடவுள் இருக்கிறாரா என்பதற்கு ஆஸ்திகர்கள் கூறும் காரணம் கடவுள் இல்லையேல் உலகம் எங்கிருந்து வந்ததென்பது. இதுவே அவர்களுடைய முதற் கேள்வியுமாகும். இருக்கட்டும் கடவுள் என்னும் ஒருவராலேயே இவ்வுலகம் உண்டாக்கப்பட்டிருக்கின்றதென்று வைத்துக்கொள்வோம். அவர் உலக முழுமைக்கும் ஒருவராகத்தானே இருக்கவேண்டும்? அவரது கட்டளையும் 'நன்மைக் கடைபிடி' தீமையகற்று என்பதாகத்தான் பொதுவாகக் கூறுகிறார்கள். இதை விடுத்து உலகத்தின் ஒரு சிறு மூலையாகிய இந்தியாவுக்குமட்டும் முப்பத்து மூன்றுக் கோடி தெய்வங்களென்றால் இந்த ஆகாயப் புளுகை அறிவுடைய உலகம் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

இத்தனை தெய்வங்கட்கும் மூன்று நான்கு வேளை உணவென்ன! முத்து செம்பு வைர ஆபரணங்களென்ன! பாலாபிஷேகங்களென்ன! பள்ளியறை வைபவங்களென்ன! கற்சிலைகளென்ன! காணிக்கைகளென்ன! தேர் திருவிழாக்களென்ன! தேவதாசிகளென்ன! லஞ்சமென்ன! இவ்வளவளித்தும் இத்தெய்வங்களின் ஓரவஞ்சமென்ன! வேற்றுமைச் சடங்குகளென்ன! கொடும் நீதிகளென்ன! என்ன இது? வேடிக்கையா? எல்லாம் வல்ல இன்பமும் துன்பமுமற்ற, உருவமும் உணர்ச்சியுமற்ற பிணி, மூப்பு, சாக்காடற்ற பசியற்ற' சர்வ சக்தியாகிய கடவுளுக்கு இத்தனை ஆர்பாட்டங்களும் ஏன்? எல்லாம் பாவம் ஒன்று மறியாத கடவுளின்மேல் பாரத்தைப்போட்டு, அர்ச்சகக் கூட்டம் வயிறு வளர்ப்பதற்காக ஏற்படுத்திக் கொண்ட மாய்மால வித்தையே! படுமோச பகற் கொள்ளையே!! என்பதை அன்பார்ந்த சகோதரிகளே! உணருங்கள்!

அர்ச்சனம் குறைவில்லாத கோடிக் கணக்கான தெய்வங்கள் பரிபாலித்து வரும் இந்நாட்டில் உண்ண ஒரு வேளை உணவும், உடுக்க கந்தையும், இருக்கவீடும் உழைக்க தொழிலுமின்றி, உழைத்தாலும் உழைப்புக்குத் தக்க கூலியின்றி அனலிடு புழுபோல் துடிதுடிக்கும் ஏழை மக்கள் எத்தனைக்கோடி? பேதைகள் என்றும் பாபிகளென்றும் துன்புறுத்தப்பட்டு இருதலைக் கொள்ளியினிடை எறும்புபோல் தத்தளிக்கும் பெண்மக்கள் எத்தனைக் கோடி? என்பதை பகுத்தறிவைக் கொண்டு அலசிப் பாருங்கள். மகிமை மிக்க கோடிக் கடவுளர்களின் மகத்வத்தையும், இக்கதையை கற்பிக்கும் புராணேதிகாசங்களின் ஆபாசங்களையும் எளிதில் உணர்வீர்கள். மூடநம்பிக்கையிலிருந்தே கடவுள் நம்பிக்கை புறப்படுகின்றது. ஆகவே மூடநம்பிக்கைகளை யொழிப்பதற்கு எழுத்தளவிலும், சொல்லளவிலும் விட்டுவிடாது செயலில் முனைந்து நின்று ஜெயம் பெறுவோமாயின் அன்றே வீரம் பொருந்திய தீரமகளிராய்த் திகழ்வதற்கு அடிகோலியவர்களாவோம்.

# தமிழருக்கு தனி நாடு

## அரசியல் நிர்ணய சபையில் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் கடமை

(மாஜி மந்திரி எஸ். ராமநாதன்)

சென்ற பல ஆண்டுகளாக தாங்கள் ஒரு தனிப்பட்ட சமூகமென்றும், மற்றவர்களைப்போல் தாங்களும் நாட்டு உணர்ச்சியைப் பெருக்கி வாழவேண்டுமென்றும் தமிழ்மக்கள் எண்ணாமல், பொதுவாக் தேசிய விடுதலை இயக்கத்தில் ஈடுபடுவதே தங்கள் கடமையாய் கருதி வந்தனர். அதனுடைய பலனாகத் தமிழ்மொழி தமிழ்நாடு என்ற பெருமை நம் மக்களிடம் ஓங்கிவளரவில்லை. அது மாத்திரமல்லாமல் தமிழ் மக்கள் வடநாட்டில் சென்ற இடங்களிலெல்லாம் அவர்களுடைய வறுமை காரணமாக அவர்களை உல்லங்கனப் படுத்தியும், அவர்களுடைய படிப்பு மேம்பாடு காரணமாகப் பொறுமையோடு கேவலமாக நடத்தப்பட்டும் வந்தனர். வடநாட்டார் நமது தமிழ் நாட்டில் உட்புகுந்து வியாபாரத்தின் !மூலம் கொள்ளைலாப மடித்தும், லேவாதேவியின் மூலம் பெரும் பணம் சம்பாதித்தும் சென்றிருக்க, தமிழ் மக்கள் வடநாட்டில் குமாஸ்தாக்களாகவும் சில்லரை அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவும் சென்று சொற்ப பணமே சம்பாதித்து வருகிறார்கள். பொதுவாகக் கூறுமிடத்து, வடநாட்டார் நமது மக்களைத் தங்களைவிட தாழ்ந்த ஜாதியைப்போல நடத்தி வருகின்றனர். நமது மக்களிடம் நாட்டுப்பற்றும், மொழிப் பற்றுமில்லாத காரணத்தால் இந்த அவமானத்தை சகித்துக்கொண்டு வாழ நேரிடுகிறது.

வெளிநாட்டு இந்தியர் பிரச்சினையை எடுத்துக்கொண்டால் தென்னாப்பிரிக்கா, இலங்கை, பர்மா, மலாய்நாடு முதலிய பிரதேசங்களில் குடியேறிய இந்திய மக்களில் பெரும்பகுதியினர் தமிழ் நாட்டார் தானென்பது யாவரும் அறிந்த விஷயம். ஆகையால் வெளிநாட்டு இந்தியர் பிரச்சினை என்பது தமிழ்நாட்டுப் பிரச்சினையாகும், வெளிநாட்டிலுள்ள இந்தியர்களுக்குச் சம அந்தஸ்தும், நன்மையும் ஏற்படவேண்டுமானால், இந்தியாவிலேயே தமிழ் மக்களுக்குச் சம அந்தஸ்து ஏற்படவேண்டும். ஆனால் இந்திய அரசியல் உலகத்தில் தமிழ்மக்களுக்கு எவ்வித பங்கும் ஏற்படாதபோது வெளிநாட்டாரிடம் அவர்களது உரிமையைப்பற்றி கோரிடுவது எங்ஙனம்!

### தமிழர்களுக்கு தனி நாடு

தமிழ்நாட்டைச் சர்வ சுதந்தரத்துடனும், உலகத்து மக்களோடு சரிசமானமாகத் தனி அரசு செலுத்தும் ஒரு தேசமாகவும் அமைப்பது முடியாத காரியமல்ல. தமிழ் நாட்டைவிட ஜனத்தொகையிலும் இயற்கை வளங்களிலும், தொழில் முறையிலும் நாகரிகத்திலும் பின்னடைந்த அநேக தேசங்கள் சர்வசங்கத்தில் முழு உரிமையும் பெற்றுத் தனி அரசுகளாக வீற்றிருக்கின்றன. இந்தியாவின் ஒற்றுமை என்ற பெயரால் அவ்வித உரிமையும் கௌரவமும் இன்றையதினம் தமிழருக்கு மறுக்கப்படுகிறது. தமிழர்களிடையே அரசியல் உணர்ச்சி குறைந்திருக்கும் இக்காலத்தில் இதைப்பற்றி வருந்திப் பயனில்லை. ஆயினும் இந்திய ஒற்றுமையின் பெயரால் அரசியல் நிர்ணயசபை மூலம் இனி ஏற்படுத்தப்படும் புதிய அமைப்பில் தமிழருக்கு மற்ற இந்திய மக்களுக்கு உள்ளதுபோல் சம உரிமையும் சம அந்தஸ்தும் ஏற்படுவதைப் பற்றியாவது நாம் கவலைப்பட்டே தீரவேண்டும். தமிழர் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அவர்களுக்கென ஒரு தேசமில்லாவிட்டாலும் ஒரு மாகாணமாவது இருக்கவேண்டும். தமிழ் ஜில்லாக்களை தனியாகப் பிரித்து இந்திய அரசியலமைப்பில் ஒரு தனி மாகாணமாவது ஏற்படுத்துவதற்கு இதுவரையில் எவ்வித முயற்சியும் செய்யப்படவில்லை. தெலுங்கர்களுடைய ஆவேசத்தின் காரணமாக நடைபெறும் ஆந்திர மாகாணக் கிளர்ச்சியின் பயனாக ஒருவேளை தமிழ் மாகாணம் இயற்கையாக அமையலாமே யொழிய அதற்கென்று தமிழர்கள் இது வரை எவ்வித முயற்சியும் செய்யவில்லை. சென்னை மாகாணத்திலிருந்து தெலுங்கு ஜில்லாக்களை தனியாக பிரித்துவிட்டால் எஞ்சி நிற்பது தமிழ் மாகாணமாயிருக்கலாம். ஆனால் அப்போது மலையாளம், தென் கன்னடம் என்று இரண்டு ஜில்லாக்களையும் என்ன செய்வதென்ற பிரச்சினை ஏற்படும். பம்பாயைச் சேர்ந்த தென் கன்னடத்தைக் கர்னாடக மாகாணத்தோடு சேர்த்துவிட்டாலும், தனிப்பட்டு நிற்கும் மலையாள ஜில்லாவை எத்துடன் சேர்ப்பதென்பது இந்திய அரசியல் திட்டத்தில் ஒரு சிக்கலான கேள்வியாக ஏற்படும். சுதேச சமஸ்தானங்களாகிய திருவாங்கூர் கொச்சியோடு அதையும் ஒன்றாக சேர்த்துதான் மலையாள மாகாணமாக்க முடியும். ஐதராபாத் சமஸ்தானத்தின் ஒரு பகுதியைச் சேர்த்துக்கொண்டுதான் ஆந்திரமாகாணம் நிலை நிற்க முடியும். ஆகவே மொழிவாரியாக இந்தியாவைப் பல மாகாணங்களாகப் பிரிப்பதென்பது சுதேச சமஸ்தானங்களை அழுத்தித்தான் சாதிக்க முடியுமென்பது ஏற்படுகின்றது. தமிழ்நாட்டை பொருத்த மட்டில் தென் திருவாங்கூர் நமது எல்லைக்கு உட்பட்டே தீரவேண்டும். அதிர்ஷ்ட வசமாக புதுக்கோட்டை என்ற சிற்றூரைத்தவிர நமது நாட்டில் சுதேச சமஸ்தானத்தைப் பற்றிய கவலையும் கஷ்டமுமில்லை. ஆகையால் பல ஆண்டுகளாகக் காங்கரஸ் சபையாலும் மற்ற அரசியல் கட்சிகளாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட மொழி வாரியான மாகாண அமைப்பு என்ற கொள்கையை அரசியல் நிர்ணய சபை மூலம் வற்புறுத்தி தமிழ் மக்கள் தங்களுக்கென பிரத்தியேக மாகாணத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். இது வரையிலிருந்ததுபோல் இவ்விஷயத்தைப்பற்றி பராமுகமாக இருக்கக் கூடாது. தெலுங்கர்கள் ஆந்திர மாகாணத்திற்காகப் போராடுகிற சப்தத்தில் தமிழ் மாகாணம் தானாகவே பிறந்துவிடுமென்று அசிரத்தையாக விருப்பது சரியல்ல. சென்னை மாகாணத்தில் தமிழர்களின் கை ஓங்கினால் தெலுங்கர்கள் தனி மாகாணத்திற்காகச் சப்தம் போடுவார்கள்! ஆனால் இப்பொழுது சென்னை அரசியலில் தெலுங்கர்கள் கை ஓங்கிவிட்டபடியால் ஆந்திர சப்தம் அடங்கிவிடலாம். ஆகவே தமிழ் மக்கள் புத்துணர்ச்சிப் பெற்று தங்களுடைய உரிமைக்காக, தமிழ் மாகாண அமைப்பிற்காக தீவிர முயற்சி செய்யவேண்டும்.

மேலே சொன்ன காரணங்களை தவிர தமிழர்களுக்குத் தனி மாகாணம் ஏற்படுத்துவதற்கு வேறொரு சிறந்த காரணமுண்டு. அதுதான் ஜாதிப் பிரச்சினை. இந்தியர்கள் இதுவரை அடிமைப்பட்டதற்கு மூலகாரணம் இந்தியாவிலுள்ள ஜாதிப் பிளவுதான் என்பதும், அந்த ஜாதிப் பிளவானது அதிகமாக ஓங்கி வளர்ந்திருப்பது தமிழ் மக்களிடையே தான் என்பதும் சரித்திர ஆராய்ச்சியாளர் கண்டறிந்த உண்மை. ஆகவே இந்தியர்கள் எதிர் காலத்தில் உண்மையில் சுதந்திரத்தோடு வாழ விரும்பினால் அவர்களது எதிர்கால அமைப்பின் அடிப்படையாக ஜாதி ஒழிப்பை அமைத்துத்தான் தீர்க்க வேண்டும். அவ்வித அரிய சேவைக்குத் தகுந்த சாதனங்கள் தமிழ் நாட்டிலேதான் உண்டு. வடநாட்டார் இந்து முஸ்லிம் என்ற சண்டையில் ஜாதியைப்பற்றிய பிரச்சினையை மறந்திருக்கிறார்கள் ஆனால் அரசியல் வாழ்க்கையில் ஜாதியை மறந்திருக்கிறார்களேயொழிய அதை அனுஷ்டிப்பதை கைவிடவில்லை, தெலுங்கு நாட்டிலும் காப்பு, கம்மா என்ற சண்டையில் பிராமண ஆதிக்கம் வளர்வதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. ஆனால் தமிழ் நாட்டை பொறுத்த வரையில் முக்குலத்தோர் என்றும் வித விதமான வேளாளர் என்றும் நவீனமான பல் பல வகுப்பு உணர்ச்சிகள் பரவி வந்தபோதிலும் அவர்களனைவரையும் பொதுவாக அடக்கியுள்ள பிராமண ஆதிக்கத்தைப் பற்றிய நினைவு மாறவில்லை. பொது மக்கள் மறந்தபோதிலும் அரசியல் சம்பவங்கள் அவர்களை மறக்கவிடுவதில்லை. சமீபத்தில் மந்திரி சபை ஏற்பட்டபோது நடந்த கலவரத்தையும், தற்சமயம் அரசியல் நிர்ணய சபைத் தேர்தலில் நடைபெறும் சம்பவங்களையும், புதிதாக ஏற்பட்டிருக்கும் விவேகானந்தா கல்லூரியைப் பற்றிய நடவடிக்கையையும் பற்றிக் கவனிப்பவர்களுக் நமது நாட்டிலும் பொதுவாக இந்தியாவிலும் ஜாதியையும் ஜாதி உணர்ச்சியையும் ஒழிக்கவேண்டியது எவ்வளவு அவசியமென்பது தெளிவாகிறது. நிறத் திமிரை ஒழிப்பதற்கே உலக மகாயுத்தம் நடைபெற்று முடிந்தது. இட்லர் இறந்துவிட்டபோதிலும் வர்ணாச்சிரமம் அழியவில்லை. ஓரளவு ஐரோப்பாவில் அதற்குச் சாவு மணி அடித்தாகிவிட்டதென்றே கூறலாம். ஆயினும் தென்னாப்பிரிக்காவில் அது உயிர் பெற்று எழுந்திருக்கிறது. இந்தியாவில் அந்தப்பேய் தலைவிரிகோலமாக ஆடுகிறது. மனித வர்க்கத்தின் வாழ்க்கையைச் சிதைக்கும் இந்தப் பேயை ஓட்டுவதற்கு ஒரு தகுந்த பூசாரி வேண்டும். தமிழனே அந்த பூசாரி, அவனே அப் பேயுடன் நெடுங்காலம் பழகி அதனுடைய மர்மங்களை அறிந்திருக்கிறான். அவனுடைய மந்திரகோலுக்கே அந்தப் பேய் கட்டுப்படும். தமிழனுக்குப் பூர்ண சுதந்திரம் கொடுத்தால் நாட்டிற்கு வேண்டிய பணியாற்றுவான்.

(சிங்கை 'தமிழ் முரசு').

கோழி கூவிற்று! வையம்,
கொண்டதோர் இருளைத், தங்க
மேழியால் உழுதான் அந்த
விரிகதிர்ச் செல்வன்; பின்னர்
ஆழிசூழ் உலகின் காட்சி
அரும்பிற்று! முனைய விழ்ந்து
வாழிய வைய மென்று
மலர்ந்தது காலை வானம்!

—புரட்சிக்கவி பாரதிதாசன்


# உதயம்

மலர் 1 13—10—46 இதழ் 11


## பிடிவாதமேன்?

ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதில் ஒருவனுக்குப் பிடிவாதமும் உறுதியுமிருக்கவேண்டியது அவசியமாகும். இவ்விரண்டு குணங்களும் ஒருவனிடம் காணப்படாவிட்டால், அவனால் எத்தவொரு காரியத்தையும் செய்து முடிக்க முடியாது. பயனுள்ளவனாகவுமிருக்க முடியாது. அதிலும் நாட்டுக்கு நன்மை செய்ய முன்வருபவர்களுக்கு, நாட்டு முன்னேற்றங் கருதியுழைக்கிறவர்களுக்கு இத்தகைய அருங்குணங்கள் அமைந்திருத்தல் வேண்டும். இல்லையேல், ஒரு சுண்டு விரலைக்கூட அசைக்க முடியாது.

ஆனால் இத்தகைய குணங்கள் எப்பொழுது அமைந்திருக்கவேண்டுமென்றால், ஒரு காரியத்தை நிறைவேற்றுவதில்—அமுல் நடத்துவதில் இருக்க வேண்டும். ஒரு காரியத்தைக் குறித்து எண்ணுவதிலே பிடிவாதமும் உறுதியும் காட்டுவது ஒரு நாளும் அழகாகாது. அதிலும் பெரும் பொறுப்பேற்றுள்ளவர்களிடையே இவைக் காணப்படுமேயானால் வருந்தாமல் இருக்க முடியாது என்பதோடு கண்டிக்காமல் இருப்பதும் பெரும் துரோகமாகும்.

ஏன் இவ்வாறு சொல்லுகிறோமென்றால், இன்று இந்நாட்டில் நடைபெறுவது பெயரளவில் ஜனநாயக ஆட்சியென்று சொல்லப்படுகிறது. ஆட்சியில் மக்களுக்குப் பங்கு இருக்கவேண்டும், மக்களே ஆட்சியை நடத்துவதாக ஆக வேண்டும் என்பதற்காக பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் கடந்த பலவாண்டுகளாக படிப்படியாக பல சட்டங்கள் இயற்றினார்கள். அதன் பயனாக படிப்படியாக மக்கள், ஆட்சியில் பங்கு கொள்ள முடிந்தது. இன்று 1935 ஆம் வருட சீர்திருத்தச் சட்டத்தின்படி 100க்கு சுமார் 30 பேர்கள் வாக்காளர்களாக வர முடிந்தது. அதுவும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் (படிக்கத் தெரிந்தவர்கள் என்றால், படிப்புக்கும் வாழ்க்கைக்கும் சம்பந்தம் இல்லாத ஒரு கூட்டம்) பணக்காரர்கள் ஆகியவர்கள் தான் இன்று வாக்காளர்களாக வரமுடிந்தது. இத்தகைய வாக்காளர்களால் தெரிந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகள் தான் இன்று நாட்டை ஆட்சிபுரிந்து வருகிறார்கள். இவ்வாட்சிபுரிந்து வருபவர்கள் ஒரு காரியத்தை முடிவுசெய்வதில் பிடிவாதம் காட்டுவது அழகாகாது என்பதோடு இம்மனப்பான்மை அபாயகரமானதென்றும் கூற ஆசைப் படுகிறோம்.

தோழர் பிரகாசம் அவர்கள் சென்னை மாகாணத்தின் பிரதமர். இம் மாகாண ஆட்சியின் பொறுப்பை ஏற்று நடத்துபவர். இவர் இப் பதவிக்கு எவ்வளவு ஆற்றலும் அனுபவமும் உடையவர் என்பதை அவர் பதவி ஏற்றதிலிருந்து இன்றுவரை இம் மாகாணத்தில் நடந்து வந்திருக்கும் சம்பவங்களையும் அவர் அவைகளை எதிர்த்து சமாளித்து வந்திருப்பதிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். அத்தகையவர், நாட்டின் எதிர்காலத்தைப் பொருத்த ஒரு விஷயத்தில் அதிலும் உயிர்போன்ற ஒரு விஷயத்தில் தான்தோன்றித்தனமாக நடக்க முன் வருவாரேயானால், அவருக்காக நாம் பரிதாபப் படுகிறோம் என்றாலும், கண்டிக்காமல் இருக்க முடியுமா?

பிரிட்டிஷார் இந்தியாவில் ஆட்சி நடத்த ஆரம்பித்ததிலிருந்து சிறிது சிறிதாக ஆயுதங்களைப் பிடுங்கி, மக்களை நிராயுதபாணிகளாக்கி பாம்பின் பல்லைப் பிடுங்கி பெட்டியில் அடைத்து வைத்திருப்பது போல், நம்மை நம் நாட்டிலடைத்து வைத்திருந்தார்கள். நிராயுதபாணிகளான ஒரு நாட்டு மக்களால் சுதந்திரப் போராட்டத்தை நடத்துவது முடியாதகாரியம் என்பதை யுணர்ந்த தோழர் காந்தியார், சட்ட மறுப்பு, சத்தியாக்கிரகம் போன்ற இயக்கங்களையும் தோற்றுவித்து அகிம்சாப் போர் முறையில் சுதந்திரப் போரையும் நடத்தி வந்தார். அத்துடன் மக்களுக்கு பிரிட்டிஷ்காரர் மீது வெறுப்பு ஏற்பட வேறு என்ன செய்யலாமென்று யோசிக்கலானார். பிரிட்டிஷார் அனுப்பும் துணிகளின் மீது வெறுப்பு ஏற்படும்படி செய்யலாம் என்ற முடிவுக்கு வந்தார். எனவே, சீமைத் துணிகளை பகிஷ்கரிக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்யலானார். சீமைத் துணிகளை பகிஷ்கரித்தால், துணிப்பஞ்சம் ஒருவேளை ஏற்பட்டால் என்ன செய்வது என்பதற்காக ராட்டினத்தையும் தக்களியையும் புதுப்பித்தார். இவையனைத்தும் சுதந்திரம் பெறும் வரையில் தான். அதாவது பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை விடுவிக்கும் வரையில் தான் இந்நாட்டின் ஆட்சி இந்நாட்டு மக்களின் கையில் வரும் வரையில்தான். அதற்குப் பிறகு சத்தியாகிரகத்திற்கோ சட்ட மறுப்புக்கோ, சீமைத் துணி பகிஷ்காரத்திற்கோ, பிரிட்டிஷாரை வெறுப்பதற்கோ இடமோ அவசியமோ இல்லை.

இன்று இந்நாட்டில் மக்கள் ஆட்சி ஏற்பட்டுவிட்டது. மக்களின் பிரதிநிதிகள் ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அதனால் தான், காங்கரஸ்காரர்கள் போர் முறையை மாற்றிவருகிறார்கள். தங்களை எதிர்க்க, தாங்கள் கையாண்ட முறையை மற்றவர்கள் கையாண்டால், கண்டிக்கவும் முற்பட்டு விட்டார்கள். அந்த நிலையில், சீமைத் துணிகளை பகிஷ்கரிக்க வேண்டிய அவசியமோ ராட்டினம் தக்கிளி முதலியவைகளை உபயோகிக்கவேண்டிய தேவையோ என்ன வந்தது? அதுவும், அன்று காந்தியாரின் விருப்பத்திற்குமாறாக நின்று பதவி ஏற்ற ஒருவர் காந்தியாரின் விருப்பத்தை நிறைவேற்ற முன் வந்திருப்பதென்றால் யாரால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியும்?

இயந்திரங்களே எமனென்று இவர் கருதுவாரேயானால் எந்த உருவத்திலும் இயந்திரத் தொழிலுக்கு இடம் தரலாகாது. ஆடைகளைத் தயாரிக்கும் இயந்திரங்களுக்கு மட்டும் தடை விதிப்பது ஒருநாளும் ஒப்புக்கொள்ள முடியாது. தோழர் பிரகாசம் அவர்கள் மில்களை அதாவது நூல் நூற்கும், துணிநெய்யும் ஆலைகளை பெருக்குவதற்குத் தான் தடைவிதிக்க முன் வருகிறாரேயல்லாது மற்ற யந்திரங்களைப் பொறுத்தமட்டிலும் ஒன்றுமில்லை.

அடுத்தபடியாக வடநாட்டில் இத்தகைய ஆலைகள் பெருகுவதற்கான வழிவகைகள் நடந்து வருகையில்,

தென்னாட்டில் மட்டும் தோழர் பிரகாசம் தடை விதிப்பதென்றால், வடநாட்டு மில் முதலாளிகளுடன் ஏதாவது 'இரகசிய' ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறாரோ என்ற ஐயம் தோன்றினால் தவறாகுமா? இல்லாவிட்டால், நாட்டில் பொறுப்புள்ளவர்கள் எல்லோரும் எதிர்த்தும் தாம் இதில் பிடிவாதம் காட்டுவதென்றால் இதன் அர்த்தம் தான் என்ன?

சென்னையிலிருந்து வெளிவரும் 'தமிழ் முரசி'ல்,

"பொருளீட்டும் பெரு முயற்சியும் பேருழைப்பும் வாய்ந்தவர் திராவிடர்களே.

"தமிழர்கள் என்றால் உழைப்பாளிகள் அல்லது தொழிலாளிகள் என்றே பொருள் கொள்ளலாம்.

"ஏனெனில், மெய் வருந்திப் பாடுபட்டுப் பொருள் தேடி வாழ்வது அவர்களுக்கே உரிததாக இருந்து வந்திருக்கிறது.

"சதுப்பு நிலங்களில் மாடு போல் உழைக்க வேண்டுமானாலும் சரி; இரங்கூன் சிங்கப்பூர் போன்ற நல்ல நகரங்களில் தெருப் பெருக்கி குப்பை கொட்ட வேண்டுமானாலும் சரியே, அவற்றிற்கெல்லாம் ஈடு கொடுத்துப் பாடுபடுபவர்கள் திராவிடர்களே.

"மெய்வருந்திப் பாடுபடுவதே தொழிலாகக் கொண்டு வந்திருந்தவர்களெல்லாம் திராவிடர்களே என்று எளிதிற் கூறிவிடலாம்."

என்று ஜி. ஏ. கிரியர்ஸன் என்பவரால் எழுதப்பட்ட 'மொழி ஆராய்ச்சி' என்ற ஆங்கிலக் கட்டுரையிலிருந்து வெளியாகியிருப்பது போல், திராவிடர்கள், பேருழைப்பாளிகள் தானே, தமிழர்கள் உழைப்பாளிகள் தானே, மெய்வருந்திப் பாடுபட்டுப் பொருள் தேடி வாழ்வது அவர்களுக்கே (திராவிடர்களுக்கே) உரியதுதானே என்று கருதித்தானே, தோழர் பிரகாசம் இம்முறையை மேற்கொள்ள முன் வந்திருக்கிறாரோ என்றும் எண்ண வேண்டியிருக்கிறது.

திராவிடர்கள் மாடுபோல் என்றும் உழைத்து வருவார்கள், அதனால் நம்மவர்கள் நகத்தில் அழுக்குப் படாமல் உல்லாச வாழ்வு வாழலாம் என்று எவராவது எண்ணுவார்களேயானால் இனி அது பலிக்காது அந்த காலம் மலையேறிவிட்டது என்றே எச்சரிக்கை செய்ய விரும்புகிறோம்.

மற்றும் 6-10-46 திராவிட நாடு "ஆலைபூரார்உபதேசம்" என்ற தலைப்பில்திட்டியுள்ள கலையங்கத்தைக் கண்ணுற்றப் பின்னும் உண்மை திராவிடர் கண் திறக்கப்படாமல் இருக்காதென்றே நம்புகின்றோம். தோழர் காந்தியார்தான் தென்னாட்டாரை கிள்ளுகீரை என மதித்து வருகிறார் என்றால், தோழர் பிரகாசம் அவர்களுமா திராவிடர்களை தென்னாட்டாரை மண்ணாங்கட்டிகள் என்று கருதியிருக்கிறார் என்று கேட்கிறோம்.

கடந்த 150 வருடங்களாக ஆங்கிலேயனுடைய சுரண்டுதலுக்கு ஆளாயிருந்து அரை வயிற்றுக் கஞ்சிக்கும் அரைத் துணிக்கும் வழியில்லாது வேற்று நாட்டானை எதிர்பார்த்து இருக்க வேண்டிய நிலையையடைந்தும், ஆங்கிலேயன் சுரண்டலை ஒழித்து வட நாட்டான் சுரண்டலுக்கு இனியும் ஆளாக இருப்பான் என்று எவரும் எண்ணவேண்டியதில்லை. இது எவ்வளவு முக்கியமான பிரச்சினை என்பதை ஒவ்வொரு திராவிடனும் உணருவான். இந்தச் சமயத்தில் ஏமாந்து விட்டால், எதிர்காலம் என்னவாகும் என்பதையும் அறிவான். தோழர் பிரகாசம் அவர்கள் கொண்டுள்ள கொள்கையை மாற்றிக் கொள்ளும்படி ஒவ்வொரு தமிழரும் திராவிடரும் முயல வேண்டும். காங்கரஸ் காங்கரஸல்லாதார் என்ற வேற்றுமை இதில் யாரும் காட்ட வேண்டிய அவசியமில்லை இது நாட்டின் பொருளாதார நிலையை பாதிக்கக் கூடியது. வட நாட்டான் கோடிக் கணக்கில் பொருளீட்ட வழி செய்து வருகையில், தென்னாட்டான் மட்டும் ஏமாந்த சோணகிரியாக யிருக்க வேண்டுமா?

இந்நாட்டில் பஞ்சமும், வேலையில்லாத் திண்டாட்டமும் மக்களை வாட்டி வதைக்கையில, நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக கொலுவீற்றிருப்பவர்கள், இவைகளைப் பற்றிக் கவலை கொள்ளாது, இந்நாட்டுக்கும் அந்நிய நாடுகளுக்குமுள்ள உறவு முறைகளை திருத்தி யமைப்பதிலும் ஏற்றுமதி இறக்குமதி பற்றி விதிகள் வகுப்பதிலும், வெளிநாட்டுடன் வியாபாரம் செய்வதற்கான திட்டங்கள் போடுவதிலும் அவசரம் அவசரமாக வேலை செய்து வருவதின் அர்த்தம் என்ன? வட நாட்டு முதலாளிகளின் தேவையைப் பூர்த்தி செய்வதில் இன்றைய சர்க்கார் முனைந்திருக்கிறது என்று தானே கொள்ள வேண்டும் இந்த இலட்சணத்தில் தென்னாட்டை வட நாட்டின் சுரண்டுதலுக்கு அடகுவைக்க அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுவதா? அப்படியில்லையென்றால், தென்னாட்டில் மட்டும் மில்களுக்கு இடமில்லையென்று கூறப்படுவதேன்?

எது எப்படியிருந்தாலும், இப்பிரச்சினையின் முக்கியத்தை யுணர்ந்து கட்சி வேற்றுமை பாராட்டாமல் தென்னாட்டுமக்கள் யாவரும் ஒன்று இம்மந்திரிசபை இம்முடிவை மாற்றிக் கொள்ளச் செய்யவேண்டும் அல்லது இம்மந்திரி சபையை மாற்றியமைக்கவாவது முயல வேண்டும். நிகழ்ச்சிகளைப் பார்த்தால், அனேகமாக மாற்றியமைக்கப்படலாம் என்றே கருத வேண்டியிருக்கிறது. அத்தகைய நிலைமை ஏற்படா முன்னமே தோழர் பிரகாசம் அவர்கள் இப்பிரச்சனையில் தமது பிடிவாதத்தை விட்டு நிலைமையையறிந்து நடந்து கொள்வார் என்றே நம்புகின்றோம்.

கடந்த மந்திரி சபையில், தோழர் ஆச்சாரியார் வட நாட்டாருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற இந்தியைக் கட்டாயப் பாடமாக புகுத்தி நாட்டில் தொல்லையையுண்டுபண்ணி, இன்னும் எத்தனை நாளைக்கு இந்த மந்திரி சபை? என்று ஒழியும் இம்மந்திரி சபை? என்று மக்கள் எண்ணி வந்ததுபோல் இன்று தோழர் பிரகாசம் அவர்கள் வட நாட்டாரை திருப்தி படுத்த காந்தியாருக்கு நல்ல பிள்ளையாய் நடந்து கொள்ள மில்களுக்கு தடை விதிக்கும் கொள்கையை கையாள்வதினால், இவரது மந்திரி சபையைக் குறித்தும் அவ்வாறு எண்ண ஏற்படும். இது ஒரு நாளும் விவேகமாகாது என்பதோடு தாமே மக்களின் வெறுப்பை சம்பாதிக்கிறவராகிறார் என்றும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறோம். என்ன செய்யப் போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

## வளரவிடக்கூடாது

வட நாட்டைப் பிடித்துள்ள 'சனியன்' தென்னாட்டையும் பிடித்துக் கொள்ளப்போகிறதாகவே எண்ண வேண்டியிருக்கிறது. வடநாட்டில் தான் இந்து முஸ்லிம் தகராறு இருந்து வருகிறதென்றால், தென்னாட்டிலும் இதுவளர ஆரம்பித்து விட்டது. இது பெரும் கவலைக்கிடமான காரியமாகும். இத்தகைய நிலைமையை வளர விடக்கூடாது கர்னூல் ஜில்லாவிலும்; சேலத்திலும் இந்துக்கள் என்று சொல்லக் கூடியவர்கள் நடத்திச் சென்ற ஊர்வலங்களின் மீதுகல்வீச்சு நடந்ததாகவும் அதன்பேரில் போலீசார்தடியடிப் பிரயோகம செய்யவும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யவும் இதன்காரணமாக பலர் காயமடையவும் சிலர் உயிர் துறக்கவுமான நிலைமை ஏற்பட்டதாக வெளிவந்துள்ள செய்தி எவர் மனதையும் வருத்தாமல் இருக்காது. இத்தகைய நிலைமை ஏற்படுவதற்கு சில அயோக்கியக் கூட்டம் தூபமிட்டு வருவதையாரும் மறுக்க முடியாது என்பதோடு இதனை வளரவிடக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

# யார் குற்றவாளி?

இந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படாமல் போனதற்கு யார் குற்றவாளி என்பதை சென்ற இதழில் விளக்குகையில் 'நேருயதாஸ்து' என்ற பாம் விழுந்ததினால் ஒற்றுமைக்கான முயற்சி பாழனது என்பதாக குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அந்த 'பாம்' பற்றி காலஞ்சென்ற மௌலானா முகம்மதலி அவர்கள் வெளியிட்டிருந்த கருத்தைக் கவனியுங்கள். அது வருமாறு:

"இந்தியாவில் கிழக்கு இந்தியா கம்பெனி அரசாட்சி செய்து கொண்டிருந்த பொழுது விளம்பரஞ் செய்ய வேண்டுமானால் தெருக்களில் அந்த விளம்பரக் காரர் முதலில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டு விட்டு அதற்கு பிறகுதான், விளம்பரங்களை வெளியிடுவது வழக்கம். 'மக்கள் கடவுளுக்குப் பாத்தியப் பட்டவர்கள் நாடு விக்டோரியா மகாராணிக்கு பாத்தியப்பட்டது. அரசாட்சியானது கம்பெனியார் பஹதூருக்கு உரியது' என்பதாகக் கூறுவார்கள்.

ஆனால் மிஸ்டர் காந்தியாருடைய கோரிக்கையின்படி தயாரிக்கப்பட்ட 'நேருயதாஸ்து'ப்படி இந்திய அரசாட்சி நிறுவப்படுமேயானால், மேற்கண்ட விளம்பரக்காரர்கள்,

'மக்கள் கடவுளுக்குப் பாத்தியப் பட்டவர்கள். நாடு பிரிட்டிஷாருக்குப் பாத்தியப்பட்டது, அரசாட்சி ஹிந்து மகாசபை பக்ஷருக்குப் பாத்தியப் பட்டது"

என்று கூற வேண்டும். இதுதான் பொருத்தமானதாக இருக்க முடியும் இன்றுள்ள நிலைமையில்"

மற்றும் மௌலானா முகம்மதலி அவர்கள் 1930-ம் வருடம் பம்பாயில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருப்பதையும் கவனிக்க விரும்புகிறோம்.

அதாவது,

"மிஸ்டர் காந்தியார் ஹிந்து மகா சபையைச் சேர்ந்த சமயவாதிகளின் ஆதிக்கத்திலிருந்து வருகிறார். ஹிந்து மதத்தை உயர்த்தி, முஸ்லிம்களை தாழ்த்துவதற்காக அவர் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

"முஸ்லிம்களாகிய நாம் எந்த ஒப்பந்தத்தையாவது உடன் படிக்கையையாவது உடைக்கவில்லை. இந்தியாவுக்கு நாம் துரோகிகளுமில்லை.

"சென்ற பத்து வருடங்களாக ஹிந்துக்கள் மெஜாரிட்டியாக உள்ள இடங்களில் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு மிகுந்த துன்பங்கள் விளைவிக்கப்பட்டு வருவதால், அவர்கள் அளவிட முடியாத கஷ்ட நஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். மிஸ்டர் காந்தியார் இத்தகைய அக்கிரமங்களைக் கண்டிக்கவுமில்லை, அடக்கவுமில்லை.

"முஸ்லிம்களையும் இஸ்லாத்தையும் இந்தியாவை விட்டு அடியோடு ஒழித்து விட வேண்டுமென்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சுத்தி, சங்காதன் முதலிய இயக்கங்களைப் பற்றி ஒரு தடவையாவது அவர்களை கண்டிக்கவில்லை.

"சென்னையில் ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தை உடைத்தது அவர்தான்.

"ஆகவே இந்த சமயத்தில் நாம் நமது திருமறையாகிய திருக்குரானில் கூறப்பட்ட கட்டளையை பின்பற்ற வேண்டியதைத் தவிர வேறு வழியில்லை. திருக்குர் ஆன் வாக்கியம் வருமாறு:

'எந்த சமூகத்தாரிடமிருந்தாவது ஒப்பந்த விரோதமும், துரோகமும் ஏற்படுமென்று நீங்கள் பயந்தீர்களேயானால் அந்த ஒப்பந்தத்தை அவர்கள் முகத்தில் எறிந்து விடுங்கள்; ஆண்டவன் துரோகிகளுடையவும், ஒப்பந்தங்களை உடைக்கிறவர்களுடையவும், செய்கைகளைப் பொருந்துவதில்லை" என்பதாகக் குறிப்பிட்டுள்ளார்

இதிலிருந்து "நேருயதாஸ்து" இந்து முஸ்லிம் ஒற்றுமையை எவ்வளவு தூரம் பாதித்து விட்டதென்பது விளங்கும். அந்த நிலைதான் இன்றும் இருந்து வருகிறது. இவ்வாறு ஒற்றுமை ஏற்படாமலிருப்பதற்கு காரணம் இவ்விரு சமூகங்களுக்குமிடையே யிருந்து வரும் பகையே யாகும். மதபுணர்ச்சியின் காரணமாக ஒரு சமூகத்தை ஒரு சமூகம் பகைத்து வருவதினால், நிலையான ஒற்றுமை யேற்படாமல் இருந்து வருகிறது. உண்மையாகவே, ஒற்றுமை ஏதாவது ஏற்பட வேண்டுமானால், பகைமை புணர்ச்சி ஒழிய வேண்டும்; அச்சம் ஒழிய வேண்டும்; பரஸ்பர நல்லுறவு ஏற்பட வேண்டும். இவைகள் என்று தோன்றுகின்றனவோ அன்றுதான் இந்நாட்டின் விடுதலை நிலையானதாகயிருக்க முடியும் என்பதோடு, ஒற்றுமைக்கு தடையாக யார் இருந்து வருகிறார்கள்? இதற்கு யார் குற்றவாளி? என்பதை முடிவு செய்யும் பொறுப்பையும் நேயர்களுக்கே விட்டு விடுகிறோம்.

---

# மதம் மாச்சிரியத்தை வளர்த்தால்?

"நாம் நெருங்கி ஒத்துழைத்தால் தகராறு ஏற்படுவது துர்லபமாகிவிடும்.

நாட்டின் நிலைமையை கவனியுங்கள் வேறு கட்சியையோ வேறு மதத்தையோ சேர்ந்தவன் என்பதற்காக சகோதரனை சகோதரன் கொல்கிறான்.

இந்தியா தனது இலட்சியத்தை நோக்கி அதிக சீக்கிரம் முன்னேறவில்லை யென்றால், அதற்கான பொறுப்பு அதன் புதல்வர்களையேசாரும்.

மதம், மாச்சரியத்தை வளர்க்குமானால் அது மதமல்ல நாஸ்திகம்."

என்று நைஜாம் சர்க்கார் நிர்வாக சபைத் தலைவர் சர்மிர்ஸா இஸ்மேயில் ஹைதராபாத்தில் மதாசார தலைவர்கள் சங்கத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார். இதை ஒவ்வொருவரும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஒருவரை ஒருவர் சகோதரர்களைப்போல் மதித்து நடக்க இடங்கொடுக்காதிருப்பது எது? இதற்கு மதம் தடையாகயிருக்க விடலாமா என்பதை சிந்தித்துப்பார்க்க வேண்டுகிறோம்.

# தோழர் அர்ச்சுனன்

திராவிடர் கழகத்தின் துணைத் தலைவர் பழயகோட்டை இளைய பட்டக்கார் தோழர் N. அர்ச்சுனன் அவர்களுக்கு கடந்த ஒரு வாரமாக மலேரியா சுரம் கண்டிருக்கிறது. சென்னை டாக்டர் குருசாமி முதலியார் அவர்களும், ஈரோடு டாக்டர் L. K. முத்துசாமி, கோவை டாக்டர் ராமசாமி முதலியவர்கள் கவலையுடன் சிகிச்சை செய்து வருகிறார்கள். விரைவில் குணமாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

# N. S. K. பாகவதர்

நகைச்சுவை மன்னன் தோழர் N. S. K. அவர்களும் தோழர் M. K T. பாகவதர் அவர்களும் சமீபத்தில் விடுதலை செய்யப் படலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. சென்னை மந்திரி சபையினர் இது விஷயத்தில் அதிக சவனம் செலுத்தி வருவதாகவும் பிரிவிகவுன்சிலின் முடிவை எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிகிறது.

★ ★ ★

# அனாதை விடுதிகள்

## சர்க்கார் உதவி அதிகரிப்பு

இந்திய அனாதை விடுதிகளுக்கு சர்க்கார் கொடுத்துவரும் "போர்டிங் கிராண்ட்' தொகையின் உயர்ந்த பட்ச அளவை மாணவர் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 6லிருந்து 8 ஆக உயர்த்தியிருப்பதாக சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

★ ★ ★

# ஹோட்டல்களுக்கு உணவுப்பொருள்

## சோளம் வாங்க கண்டிப்பு

சாப்பாடு ஹோட்டல்களும் மற்ற ஹோட்டல்களும் தங்கள் தேவையில் 10 சத விகிதம் உணவுப்பொருள்களை கட்டாயமாக சோளமாக வாங்கவேண்டும் என்று சென்னை சர்க்கார் உத்தாவுப் பிறப்பித்திருக்கின்றனர்.


## உதயம்

சந்தா விபரம்:

உள்நாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 5—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 2—8—0 |
| தனிப்பிரதி ரூ | 0—1—3 |

வெளிநாடு:-

| | |
|---|---|
| வருடச்சந்தா ரூ | 7—0—0 |
| 6 மாதச்சந்தா ரூ | 4—0—0 |

மானேஜர்,
"உதயம்"
திருவத்திபுரம். N.A.

# கலைவாணி!

(இளங்கோன், சென்னை)

காலமெல்லாம் உன்னை கைதொழுததில் கண்டபலன் இதுதானா? ஞாலமெலாம் புகழ் நாயகி நீ என்பதை நம்ப முடியுமா? பூவுலம்தொழுதேவி நீயெனப் பூசுரர்க் கூறுவது உண்மையெனின், உன்னிரு நேத்திரங்களுள் ஒன்றுக்கு வெண்ணையும், மற்றதற்கு சுண்ணாம்பும் நீட்டலாமா? வெண்ணை நீட்டிய கண் பன்னீரால் கழுவப்படுகிறது. சுண்ணாம்பு நீட்டியகண் கண்ணீரால் கழுவப்படுகிறது. எரியும் கண்ணோடு நீ இன்னும் சுகித்திருக்கிறாய் என்பதை எப்படி நம்ப முடியும்.

சகலகலாவல்லியே!

உண்மையில் இப்பெயருனக்குப் பொருந்துமா? நீ வாழும் நாட்டிலே ஒருவனாவது சகலகலாவல்லுனன் உண்டா? ஏடு பிடிக்கும் கைகளுக்கு ஏணி பிடிக்கத் தெரியுமா? ஏர் பிடித்தவைகள் எழுதுகோல் பிடித்ததுண்டா? உன்னைப் பூஜிக்கும் ஊரிலேதான், கற்க கருத்திருந்தும், முயன்றும் முடியாமற் போய் மனமுடைந்த "இருதயங்கள்" பெருகுகிறது. நீ வாழும் நாடு படிக்காத இனம் புதைப்படும், பணக்கார பருந்துகள் வட்டமிடும் சுடுகாடாக காட்சியளிக்கிறது. நீ இருக்குமிடம் என்றாவது உருப்பட முடியுமா?

வேதபொருளுக்கிறைவி!

உனக்குப்பெயர் வேதப் பொருளுக்கிறைவி இருந்தும் ஏன் உன் நாதன் நான்முகன் கதியாதாயிற்று? மற்றவர்களைப் போல் மார்பிலும், பக்கத்திலுமா வைத்திருக்கிறான்? நாளும் அவன் நாவில் நீ குடியிருந்தும் 'ஓம்' என்ற வார்த்தைக்கு அர்த்தம் தெரியாமல் சிறைப்பட்டான் என்பது உண்மையானால்? நீ இருக்குமிடம் நாசமாகிவிடும் என்பதற்கு வேறு அத்தாட்சி தேவையா? அதனால்தான் மனம் வெருண்ட மக்கள், உன்னைப் போற்றி பூஜிப்பதில் பயனில்லை என அறிந்து தம் தொழிற் கருவிகளையே பூஜிக்க ஆரம்பித்து விட்டனர். போதும் அதுமட்டுமா? உன் பெயரையே எடுத்துவிட்டு 'ஆயுத பூஜை' என்றேபெயர் வைத்துவிட்டார்களே! நீ இன்னும் மானமின்றி வாழலாமா?

வாழவிரும்பினால்.........

உன் வர்க்கங்களையே ஊரைவிட்டு ஓட்டியபின், உலகிலேயே உன்னத நிலையடைந்திருக்கும் ரஷ்யாவைப்பார்! அறிவு எனும் நீர் அருவிக்கு கல்வியெனும் கால்வாயை எப்படி, மடமையெனும் தாகத்தில் மடியும் மக்களிடை கொண்டுவரும் போது, பக்கலில் நிற்கும் புராணம் எனும் மணற் குன்றுகள் சரிந்து சரிந்து விழுந்து நீரோட்டத்தை தடைசெய்வதைக் கண்டார்கள். உடனே அம்மணற் குன்றுகளை அப்புறப்படுத்தி மடிந்த மக்களுக்கு சமாதி கட்டிவிட்டார்கள். அதனால்தான் அங்கே கல்வி யாவருக்கும் பொது. கைத்தொழிலும் அப்படியே. அதனால்தான் கூறுகிறேன் உடனே ஓடிவிடு.

ஏழையின் குடிசையிலே இனியிருக்க நியாயமில்லை வறுமைக் கனலைச் சகியாது வெளியாகும் வியர்வையும், வண்கணாளர் தம் கொடுமையைச் சகியாது சிந்திய கண்ணீரும் குடிசையின் நிலத்தை சேறாக்கி விட்டது. சுவரில் தானே இருக்கிறோம் நமக்கென்ன என்று நினையாதே. நீ இருக்கும் சுவர் சேற்றில் நடப்பட்ட கம்பம். அஸ்திவாரம் ஆட்டம் கொடுக்கிறது. அதுமட்டுமல்ல. தன் மகன் உழைத்து உழைத்து சம்பாதித்த ஓரணாவையும், உனக்கு மலர் மாலை வாங்கி சாத்திவிட்டு 'சற்பூரத்திற்கு காசில்லையே' என்று கசக்கி கசக்கி சிவந்த கண்களிலே கண்ணீர் ததும்பும் தாயையும், அதே நேரத்தில் அவர்களுக்கெதிரிலேயே, புன்சிரிப்புடன் இருக்கும் உன் முகத்தையும் பார்க்கும் மகன், தன் ஆத்திரத்தை அடக்க முடியாமல், உன்படத்தை சுக்கு நூறாக உடைத்து அக்காகிதத்தால் தன் தாயின் கண்களை துடைத்துவிட்டு, கண்ணாடித் துண்டுகளை எடுத்துக்கொண்டு உன்னைப் போற்றுகிறவர்கள் உடலை கிழிக்க புறப்பட்டுவிடுவான். அதற்குள் ஓடிவிடு. ஆனால் பணக்காரர் வீட்டில் குடிபுகுந்து விடாதே!

ஆம்! உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டு அங்கிருப்பவைகளை அளவுக்கு மீறி சாப்பிட்டுவிட்டு அங்கேயே உறங்கிவிடுவாய் பின்னர் அப்பணக்காரக் கூட்டம் ஏழைகளைக் கூப்பிட்டு, உன்னால்தான் தாங்கள் உயர்வெய்தியதாகக் கூறி, ஒரு பிடி அவலையும், ஒருதுளி சர்க்கரையையும் கொடுத்து உன்னை தூக்கிக்கொண்டு போக சொல்லி விடுவார்கள். உறங்கி விழிக்குமுன் பழைய நிலைதான்!

ஏன்விழிக்கிறாய்?

எங்கே போவதென யோசிக்கிறாயா? நான் கூறுகிறேன் கேள். போ! போ!! மந்திரிகளின் பேனா முனைக்குப்போ!!! தயங்காமல் தைர்யமாகப்போ! நாட்டிலே நூற்றுக்கு தொண்ணூற்றேழு பேர் தற்குறிகள் என்று சொல். அது அவர்கள் 'தலைவிதி என்பார்கள்' தலைவிதி சோம்பேறிகளின் வேதாந்தம்' வேதாந்தம்' என்று சொல். 'வழியென்ன' என்பார்கள். ஒருவார தவணைக்குள் கையெழுத்துப் போட கற்றுக்கொள்ளாதவர்களுக்கு ஒருவார தண்டனை. ஆறு மாதத்திற்குள் அரிச்சுவடி படிக்காவிட்டால் ஒருமாத தண்டனை என சட்டம் இயற்ற சொல். தண்டனை ஏற்போர்க்கு தண்டசோறு போடுவது யார் என்பார்கள்? உன் கோவிந்தியார் குடியிருக்கும் கோயிலுக்கு அழைத்துச் சென்று அங்கே, பணம் அடைபட்டுக் கிடப்பதைக்காட்டு. 'தொட்டால் சர்ப்பம் சீறுமே' என்று சொல்லி ஏய்த்து விடுவார்கள். பக்கத்தில் நானிருக்கிறேன் பயப்படாதீர்கள் என்று சொல். திராவிடத்தில் நூற்றுக்கு நூறு பேரும் படித்தவர்கள் என்றேற்பட்ட பிறகு என்னை வந்துபார். நீ ஒருக்காலும் வரமாட்டாய். உலகமே உன்னைப்போற்றும். அந்நேரத்தில் என்னைப்பற்றி யோசிக்க நேரமே இருக்காதே!

# இழி நிலைச் சமூகம்

(கவி பாரதிதாசன்)

கருங்கடலில் மேல் பொன்னிறக் கதிர்கள்
இலங்கும் வண்ணம் எழுந்த பரிதியே!
நேற்றுங் கண்டோம் நின்னை இக்கடல்மேல்
அதற்கு முன்னாள்; அதற்கு முன்னாள்!
தினம்தினம் காலையில் சேர்வது கண்டோம்!
மாலையில் மேற்றிசை மறைவது கண்டோம்!
யாமுனைக் காணல்போல் நீஎமைக் காண்கிறாய்!
அனைத்துத் தேசமும் நிதம்உனை அறிவன!
அவையெலாம் நீயும் அனுதினம் காண்கிறாய்!
சொல்லுவேன் இதுகேள் தொன்மைச் சுடரே!
நாளொரு புதுமை! மாதமோர் நன்னிலை!
உடுத்த ஆடை அடுத்தநாள் களைதல்போல்
புதிய புதிய செயல்கள் புரிந்திடும்
செகத்தைத் தினந்தினம் காணும் நீதான்,
எனது சமூகம் இழிநிலை நின்றும்
இம்மி பெயர்ந்தது முண்டோ இசைப்பாய்
சாதி, சமயம் சாத்திரப் புராணம்
மனிதர் மனிதரைச் சாமியாய் வணங்கல்
ஆனவை பலவும் சமூகத்தை அழுந்திக்
"கண்ணுள மட்டும் இருட்டை விட்டகலோம்"
என்று சொல்லும் இழிநிலைச் சமூகம்
எங்கே யிருக்கக் கண்டிருக் கின்றாய்!
கருங்கடலின்மேல் பொன்னிறக் கதிர்கள்
இலங்கும் வண்ணம் எழுந்த பரிதியே
மக்கள் நிலையின் ஈனத்தைக் காண
உள்ளம் நாணியோ உன்றன் ஒளியிற்
குன்றிக் குன்றி மேற்றிசை
சென்றிடுகின்றாய்? வேறென்ன செய்வையோ!

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

தாழ்ந்துவிட்டது இனியும் வடகோடு தாழ்ந்து பாதாளத்திற்கு போய்விடாம லிருக்க அகஸ்தியர் தென் கோட்டு பொதிகை மலையில் வந்திருந்தார் இருந்து பூலோகத்தை சமநிலையில் இனியும் வைத்துக் கொண்டிருக்கிறதாக சைவ ஆசாரி பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். ஏதாவது கேட்டுவிட்டாலோ சுயமரியாதை சங்கத்தார்கள் கல்வி அறிவற்றவர்கள்; சிவபெருமானை நிந்திக்கிறார்கள்; கடவுளே இல்லை என்கிற நாஸ்திகன் என்கிறார்கள். தமிழ் நாட்டைக்கெடுத்த கம்ப இராமா யணத்திற்கு பக்கபலம் கற்பனையான அகஸ்திய ரிஷிதான். தமிழ் பண்டிதர்க ளில் அகஸ்தியரைப்பற்றி சொன்ன பண் டிதன் நமசிவாய முதலியார் அவர்களே!

மனிதர்களுக்குப் பிறக்காமல் புள்ளு, பாம்பு, முயல், நரி, கலசம் முதலியவற் றிற்குப் பிறந்த ரிஷிகளுமுண்டு. அவர் களுக்கு கதைகளுமுண்டு வேத வேள்வி தவசு, பிராமண உத்தமர்கள் சாபம் கொடுத்தல் தெய்வலோக பூலோக நடப் பாதை முதலிய யோக்கியதைகளுமுண்டு. நதிமூலம் ரிஷிமூலம் நினைக்காதே கேட் காதே என்கிற உபதேசம் நமக்கும் நம் பண்டிதர்களுக்கும் உத்தரவாயிருக்கிறது. சாபத்தைத்தாண்டிச் செல்லும் தைரி யம் நமது பண்டிதர்களுக்கே இல்லாம லிருக்கையில் நமக்கு எப்படியுண்டாகும்? நானறிய பிராமணர்களல்லாத எத்தனையோ மௌனிகள் அவதூர் சந் நியாசிகள், வேதாந்த விசாரணையிலேயே வைராக்கியமாயிருந்தவர்கள், ஆசைக்கு அனுகூலமிருந்தும் முக்கிய பல ஆசைகளை விட்டவர்கள் இருந்தார்கள். இவர்களை பார்ப்பார்கள் புகழவுமில்லை மதிக்கவு மில்லை; ரிஷியாக்கவுமில்லை. இவர்களிடம் சூத்திரன் என்கிற குற்றமல்லாததால் ரம ணிக ரிஷியைப்போல சொத்து சேர்க்க வில்லை; தங்கள் தம்பிக்கு எழுதிவைக் கவுமில்லை. கடவுளும், ஞானமும் பரந்து கிடந்தாலும் பிராமணன் தான் ரிஷி யாகலாம் என்பது நமது கடவுள் கட்டளை. இப்பொழுது மைலாப்பூரில் சேலம் வக் கீல் நரசிம்மய்யர் ரிஷியாக்கப்பட்டு வரு கிறார். இவர்கூட சாயிபாபா சாமி பேசு கிறதாம். சென்னை கண்ணாஸ்பத்திரியில் குணப்படாத கண் வியாதி சௌவுக்கியப் படுத்தப்படுத்துகிறதாம் இதை விளம்பரப் படுத்த ஒரு ஆபீஸ்ஒரு பத்திரிகை;பல ஏஜண்டு.

நமது நாட்டில் பல தெய்வங்களை சிருஷ் டித்து பல கோவில்கள் கட்டினாகள். அவைகளுக்குப் பக்க பலமாக பல ரிஷிகளை யும் சிருஷ்டித்தார்கள். படிப்பும் புத்தியு முடைய ஜாதிக்கு நமது நாட்டில் இதுவே தொழிலாக முடிந்தது. வேறு எந்த நாட்டி லும் இந்தத் தொழிலையுடைய ஒரு ஜாதி யுமில்லை உலகத்திலுள்ள மற்ற எந்த சம யத்தக்காவது தெய்வ லோகத்திலி ருந்து மனிதர்களைக் கூட்டி வந்து பூலோ கத்தில் குடிவைத்து தானும் ஒரு குடித் தனம் நடத்தியதைப் பார்த்தீர்களா? கேட் டீர்களா? நமது கடவுள் தெய்வ லோகத்தி லிருந்து மூவாயிரம் மனிதர்களை பூலோ கத்திற்குக் கூட்டி வந்து குடிவைத்து தானும் அவர் கூடவே குடித்தனம் பண் ணினதைப் பார்த்தும் கேட்டுமிருக்கிறீர் களே. அதைத் தெரியப் படுத்த சிதம்பரத் தில் நமது கடவுள் அறுபத்தினான்கும் ஆட்டமும் ஆடிக்கொண்டிருக்கிறது. எல்லா மதஸ்தர்களுக்கும் பொதுக் கட வுள் உண்டு. அந்தப பொதுக் கடவுள் அவதார மெடுத்து பூலோகத்திற்கு வந்து பாடுபடுகிறவன் சோற்றை பாடுபடாமல் தின்னமுகத்திலிருந்து ஒரு ஜாதியை உண் டாக்கினேன், அந்த ஜாதிக்கு நான் அடிமை என்று பாடி யிருக்கிறதா? நமது முன்னோர்கள் முட்டாள்களாவென்று பண்டிதர் சேது பிள்ளை அவர்கள் கேட்டு விட்டால் அதில் எல்லாம் அடங்கி விடுமா? மனமும் சங்கலமும் எல்லாருக்குமுண்டு.

வாணியம்பாடியில்

## டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி விஸ்வநாதம் படத் திறப்பு

சென்னை "லிபரேட்டர்" ஆசிரியர் டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி முதலியார் பாரிஸ்டர் அவர்களுக்கு வாணியம்பாடி நகரசபையார் 29-8-46 மாலை 4 மணிக்கு ஒரு வரவேற்பு பத்திரம் வாசித்தளித்தார் கள்.

நகரசபை உபதலைவர் திரு வி. எஸ். விசுவநாதம் அவர்கள் நகர சபைக்கும், பொதுஜனங்களுக்கும் புரிந்து வரும் சேவையை பாராட்டி திருவாளர்கள் T. கரிய கவுண்டர், வக்கீல் ராகவ முதலி யாரவர்களால் பாராட்டி பேசப்பட்டது.

பின்பு திரு டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தனக்களித்த வரவேற்புக்கு நன்றி செலுத்தியும், இந்து முஸ்லிம் ஒற்றுமையின் அவசியத்தை விளக்கியும், வைஸ்சேர்மென் குணதிசயங்களைப் புகழ்ந்தும் ஆங்கிலத்தில் கடல்மடை திறந் தாற் போன்று ஓர் அரிய சொற்பெருக்கு நிகழ்த்தி வைஸ்சேர்மென் படத்தை திறந்து வைத்தார்.

விழாவிற்கு விஜயம் செய்திருந்த ஏராள மான இந்து முஸ்லிம் பிரமுகர்கள் அவ ருடைய நாவன்மையை கேட்டுப் பரவச மாயினர்.

சேர்மென் ஜனுப் மலையாளம் அப்துல் கொத்தூஸ் சாயபு அவர்கள் வந்தனோப சாரம் கூற கூட்டம் கலைந்தது.

★ ★ ★

## சென்னை சர்க்கார் கல்வி சீர்திருத்தம்

கல்வி சீர்திருத்தம் சம்பந்தமாக சென்னை சர்க்கார் வெளியிட்ட கேள்வித் தாளைக்கோரி பலர் கடிதம் எழுதியிருப் பதாயும், இது எல்லாப் பள்ளிக்கூட தலைமை யாசிரியர்களுக்கும் அனுப்பப் பட்டிருப்பதாயும்; பத்திரிகைகளிலும் வெளியிட்டிருப்பதாயும், அவற்றைப் பார்த்து பலரும் கேள்விகளுககுப் பதில் அளிக்கும்படியும், அவற்றைக் கல்வி இலாகா தலைவருக்கு அனுப்பும்படியும் சர்க்கார் கேட்டுக்கொள்கிறார்.

தேவை! தேவை!!

எங்கும் புகழ்பெற்ற

N. K. P. வேல் டைரக்ஷன் ஆயில் அண்டு சோப்

விற்பனை செய்ய

ஏஜண்டுகள் தேவை!!!

சாயத் தொழிலுக்கு முதன்மை பெற்றது. இண்டாந்திரியன் முதல் நெப்தால் வரை உபயோகப் படுத்தலாம். ஒரே மணி நேரத்தில் நூல் நனைந்து நன்றாய் ஊறிவிடும். அப்பொழுதே சாயங்கள்

தீர்க்கலாம்

சாயம் தீர்க்கப்பெற்ற நூல் மிருதுவாகவும், பாலிஷாகவும் இருக்கும். எவ்வித பரீக்ஷைக்கும் உத்திரவாத முள்ளது. விபரத்திற்கு எழுதவும்.

இன்றே ஆர்டர்களுக்கு முந்துங்கள்

விலாசம்:—

செல்வம் டர்க்கிரெட் ஆயில் ஸ்டோர்,
திருச்செங்கோடு, P. O., சேலம் ஜில்லா,

உரிமையாளர்:—N. K. P. வேல்.

Printed by M. Vedapuri Mudaliar at Sri Lakshmi Press 207, Bazar St., Tiruvettipuram. Edited, and Published by M. Kandaswamy, at 203, Bazar St., Tiruvettipuram. (N. A.)